# 6. மெய்ப்பாட்டியல்

**மெ**ய்ப்பாடு என்பது மெய்யின்கண் தோன்றும் தன்மை. மெய்-தேகம். மெய்யின் கண் தோன்றுதலின் மெய்ப்பாடு ஆயிற்று என்பர் இளம்பூரணர். ஒருவன் புலி போன்ற கொடிய விலங்குகளைக் கண்டு அஞ்சிய நிலையில் அவன் உள்ளத்தில் கிலி, நடுக்கம், வியர்த்தல், பேதலித்தல் போன்ற நிலைகள் தோன்றும். இத்தகைய உணர்வுகளை மறைத்தல் இயலாது. இதுவே இங்கு மெய்ப்பாடு எனப்பட்டது. இதனையே தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் என்று அமைத்துள்ளமை கொள்ளத்தக்கது. அச்சம் மட்டும் அல்லாது எட்டுவகையான மெய்ப்பாடுகள் இங்குச் சொல்லப்படுவதாகும்.

27 நூற்பாக்களுடைய இவ்வியல் 1. மெய்ப்பாட்டின் பொது வகைகள். 2. அகத்திணைக்குரிய மெய்ப்பாடுகள்; 3. தலைமக்கள் சால்பு என மூன்று துணைத் தலைப்புகளில் ஈண்டு சாற்றப்பட்டுள்ளன.

இனி இந்நூற்பாக்களையும் இவற்றின் விளக்கத்தையும் இனிது காண்போம்.

## 1. மெய்ப்பாட்டின் பொதுவகைகள்

**நூற்பா-245:**

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான்கு என்ப.

8×4=32

4×4=16

**தெளிவுரை:** விளையாட்டு ஆயத்தில் தோன்றிய முப்பத்திரண்டு பொருளையும் குறித்தகன் புறத்து நிகழும் பொருள் பதினாறு என்று மேலோர் சொல்லுவர்.

**விளக்கவுரை:** புலியைக் கண்டு அஞ்சிய ஒருவன் கைகால்கள் அஞ்சி நடுங்கின. ஆங்கு, நிகழ்ந்த நிலைப்பாடு நான்காவன.

| | |
|---|---|
| புலி-சுவைப்பொருள்- | 1 |
| புலியைக் காணுதல்-சுவையுணர்வு- | 2 |
| அஞ்சுதல்-குறிப்பு- | 3 |
| கை கால் நடுங்குதல்-விறல்- | 4 |

இந்நான்கும் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி ஆகிய இடத்துத் தோன்றும் வகையில் 8×4=32 ஆகும்.

மற்றும், புலியை இன்றிக் காணல் தன்மை இல்லையாதலால் இவை இரண்டும் ஒருதன்மையாகக் கொள்ளப்படும். அடுத்து, அஞ்சுதல் இன்றிக் கைகால்கள் நடுக்கம் பெறாததால் இவை இரண்டும் ஒருதன்மையாக் கொள்ளப்படும்.

இதன்படி 8×2=16 என்பதாம்.

இங்குப் புலியையே அல்லாது பேயையும் சுவைப் பொருளாகக் கொள்ளப்படுதலும் உண்டு.

**அரும்பதவுரை:** பண்ணை-விளையாட்டு ஆயம். எண்ணான்கு-32. கண்ணிய புறன்-புறத்தே இடம்பெறுவன. நானான்கு-16. 1

**நூற்பா-246:**

நாலிரண் டாகும் பாலுமார் உண்டே.



**தெளிவுரை:** மேற்கூறப்பட்ட பதினாறு பொருளும் எட்டாக வரும் இடனும் உண்டு.

**விளக்கவுரை:** மேலே கூறப்பட்ட சுவைப் பொருள், சுவை யுணர்வு, குறிப்பு, விறல் ஆகிய நான்கினையும் ஒன்றெனக் கருதி அவற்றை மெய்ப்பாட்டின் வகை எட்டினொடு அடக்கிச் சாற்றப்படுதலும் உண்டு. 2

**அரும்பதவுரை:** நாலிரண்டு -8 பால்-பக்கம்

**நூற்பா-247:**

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பாடு என்ப.

**தெளிவுரை:** நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று மெய்ப்பாடு எட்டு என்று கூறுவர். 3

**நூற்பா-248:**

எள்ளல் இளமை பேதைமை மடன்என்று
உள்ளப் பட்ட நகைநான்கு என்ப.

**தெளிவுரை:** எள்ளல், இளமை அறிவின்மை, மடமை என்னும் நான்கின் இடத்தும் நகை தோன்றும்.

**விளக்கவுரை:** நகை என்பது முறுவல் ஆகும். இவை நான்குவகையினதாக நிலைக்களம் ஆகும்.

1. **எள்ளல்:** இது கேலிப் பேச்சு. இதனைக் கூறுவதாலும் நகை தோன்றும். கேட்பதாலும் நகை தோன்றும்.

2. **இளமை:** இது குழந்தைத் தன்மை. அழகும் துடிப்பும் கொண்டு விளங்கும் குழந்தையைக் காண்பதால் மகிழ்வை யுண்டாக்கும். இது நகையின் பாற்பட்டது.

3. **பேதைமை:** பிறன் அறியாமை கண்டு நகை தோன்றும். ஒருவர் பூமாலையை மனத்திற் கொண்டு மாலை வந்ததா என்று வினவ பதில் சொல்பவன் காலப் பொழுதை மனத்திற் கொண்டு மாலை 5 மணிக்கு வரும் என்று சொல்ல அதைக்கேட்டோன் நகை செய்தல் ஆகும்.

4. **மடன்:** பொருண்மை அறியாத தன்மையில் திரிபு கொள்ளுதலால் நகை தோன்றும். 4

**நூற்பா-249:**

இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே.

**தெளிவுரை:** அழுகை என்னும் மெய்ப்பாடு இழிவு, இழவு, அசைவு, வறுமை ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்.

**விளக்கவுரை:**

1. **இழிவு:** இழிவு என்பது பிறர் தன்னை இழிவாக எண்ணுதலால் உண்டாவது.

2. **இழவு:** உயிரானும் பொருளானும் கை விட்டு இழத்தலால் தோன்றுவது.

3. **அசைவு:** தன்னுடைய தளர்ச்சி, செயலற்ற தன்மையால் உண்டாவது.

4. **வறுமை:** பொருள் இன்மை என்னும் தன்மையால் உண்டாவது.

**அரும்பதவுரை:** இழிவு-பிறர் தன்னை மதியாது இகழ்தல். இழவு-உயிர் அல்லது உடைமைப் பொருள் இழத்தல். அசைவு-தளர்ச்சி. விளிவு இல் கொள்கை-கேடில்லாத தன்மை. அஃதாவது அழுகை மெய்ப்பாடு வருதலைக் குறித்தது. 5



**நூற்பா-250:**

மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே.

**தெளிவுரை:** இளிவரல் என்னும் சிறுமை முதுமை, பிணி, வருத்தம், எளிமை ஆகிய நான்கினையும் நிலைக்களனாகக் கொண்டு பொருந்துமாறு தோன்றும்.

**விளக்கவுரை:**

1. **மூப்பு:** முதுமை. இதன்வாயிலாக உடலின்கண் மாற்றமாக உண்டாகும். நரை, திரை, கண் குழிவு முதல், பல் உதிர்தல் ஆகியனவும் நினைவு தளர்தலும் கொண்டு இளிவரல் தோன்றும்.

2. **பிணி:** நோயின் தன்மையால் இளிவரல் தோன்றும்.

3. **வருத்தம்:** தோல்வி முதலியவற்றின் காரணமாக வருந்தியபோது இளிவரல் தோன்றும்.

4. **மென்மை:** இது மெலிவு என்னும் வகையில் உறுதியும் திடமும் அற்ற தன்மையாம்,

**அரும்பதவுரை:** மூப்பு-முதுமை நிலை. மென்மை-வலிமை இன்மை. யாப்புற-பொருந்தியவாறு. இளிவரல்-சிறுமை. இழிவு. 6

**நூற்பா-251:**

புதுமை, பெருமை, சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.

**தெளிவுரை:** புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்று சொல்லப்படும் நான்கினையும் நிலைக்களனாகக் கொண்டு அறிவின்கண் அமையாத மருட்கை என்னும் மெய்ப்பாடு தோன்றும்.

**விளக்கவுரை:**

1. **புதுமை:** புதுமையுடைய பொருள் தோன்றியவிடத்து அதனைக் காணும் வகையில் வியப்பு உண்டாக மருட்கை தோன்றும்.

2. **பெருமை:** முன்பு மிகவும் சிறியதாக இருந்த நிலை மாறிப் பெருமை கண்ட வழி மருட்கை தோன்றும்.

3. **சிறுமை:** முன்பு சாதாரணமாக இருந்த தன்மையி லிருந்து மாறுபட்டுச் சிறுமையடைந்த நிலையில் மருட்கை தோன்றும்.

4. **ஆக்கம்:** எளிதாக எண்ணப்பட்ட ஒன்று மிகவும் பெருத்த அளவில் ஆக்கம் அடைதலைக் கண்டு மருட்கை தோன்றும்.

**அரும்பதவுரை:** புதுமை-புதிய தன்மை. ஆக்கம்-பெருத்த ஆதாயம். மதிமை சாலா-அறிவின்பால் பொருந்தாத் 7
தன்மை. மருட்கை-மருட்சி.

**நூற்பா-252:**

அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே.

**தெளிவுரை:** அணங்கு, விலங்கு, கள்வர், தமக்குத் தலைவராயினோர் ஆகியவரை நிலைக்களனாகக் கொண்டு மாறுதல் இல்லாத அச்சம் தோன்றும்.

**விளக்கவுரை:**

1. **அணங்கு:** இது தெய்வப் பெண், பேய், பூதம் போன்றவை குறித்தது. இவற்றைக் கண்டு அச்சம் தோன்றும்.

2. **விலங்கு:** காட்டு விலங்குகள் குறித்து அச்சம் நிகழும்.



3. **கள்வர்:** கள்வர் தீத்தொழில் புரிதலால் அவர்களைக் குறித்து அச்சம் தலைப்படும்.

4. **தம் இறை:** தமக்குத் தலைமையாயினாரிடத்துப் பணிவும் கீழ்ப்படிதலும் காரணமாக அச்சம் நிகழும். இறை என்பதற்கு அரசன் எனக் கொண்டு குற்றம் புரிந்தாரைத் தண்டித்தல் காரணமாக அச்சம் நிகழும் என்பதாம் எனவும் சொல்லப்படும்.

**அரும்பதவுரை:** அணங்கு-தெய்வப் பெண். பேய், பூதம் முனி முதலாம். இறை-தலைமை ஆயினோர். அரசர். பிணங்கல்சாலா-மாறுதல் இல்லாத. இது அச்சம் தோன்றுத 8
லின் உறுதிப்பாடு சாற்றியது.

**நூற்பா-253:**

கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே.

**தெளிவுரை:** கல்வி, தறுகண், புகழ், கொடை என நான்கின் இடமாகப் பெருமிதம் என்னும் மெய்ப்பாடு தோன்றும்.

**விளக்கவுரை:**

1. **கல்வி:** கல்வியில் வல்லோன் என்னும் தன்மையால் பெருமிதம் தோன்றும்.

*"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து"* -திருக்குறள், 398

என்று திருவள்ளுவர் சாற்றியவழிக் கல்வியின் சிறப்பு அமைதல் காண்க.

2. **தறுகண்:** அஞ்சாமையாகிய வீரத்தை இடமாகக் கொண்டு பெருமிதம் தோன்றும் என்பதாம்.

3. **புகழ்:** புகழ் என்னும் சிறப்பின்வழிப் பெருமிதம் நிகழும்.

இதனைத் திருவள்ளுவர்,

*"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்*
*பொன்றாது நிற்பதுஒன்று இல்.* *-திருக்குறள், 233*

என்று சாற்றியவாறும் கொள்க.

4. **கொடை:** இது ஈகை என்னும் வகையில் விளங்குதலாம். கொடை என்னும் வள்ளல் தன்மையால் பெருமிதம் தோன்றும்.

**அரும்பதவுரை:** தறுகண்-வீரம். 9

**நூற்பா-254:**

உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன
வெறுப்ப வந்த வெகுளி நான்கே.

**தெளிவுரை:** உறுப்புக்களைக் குறைத்தல் குடிப்பிறப்புக்குக் கேடு சூழ்தல், கோல் கொண்டு அலைத்தல், கொலைத் தன்மையில் ஆதல் என்னும் நான்கு வகையாலும் வெகுளி நிகழும்.

**விளக்கவுரை:**

1. **உறுப்பறை:** இது கை, கால் முதலிய உறுப்புகளைக் குறைத்தல். இதனால் வெகுளி தோன்றும்.

2. **குடிகோள்:** இது குடும்பத்தில் மேவும், மனைவி, மக்கள், சுற்றம் முதலானோர்க்குக் கேடு சூழ்தல். இதனால் வெகுளி தோன்றும்.

3. **அலை:** இது பிறரை வசைமொழி கூறுதலும் கோல் கொண்டு தண்டித்தலும் ஆம். இதனால் வெகுளி நிகழும்.



4. **கொலை:** இது கொல்லுதல் தன்மை குறித்தது இதனால் வெகுளி தோன்றும்.

**அரும்பதவுரை:** உறுப்பறை-உறுப்புக் குறைத்தல். குடிகோள்-குடியைத் துன்புறுத்தல். அலை-வசை கூறுதலும் கோல்கொண்டு புடைத்தலும். வெறுப்ப-வெறுத்தலை உண்டாக்கும் தன்மை இதனால் இதனை நீக்கப்படுதல் வேண்டும் என்னும் குறிப்புச் சாற்றப்பட்டது. வெகுளி-சினம். உருத்திரம் எனவும் ஆம். 10

**நூற்பா-255:**

செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டுஎன
அல்லல் நீத்த உவகை நான்கே.

**தெளிவுரை:** செல்வம், ஐம்புல நுகர்ச்சி, தலைவன் தலைவி புணர்தல், விளையாட்டு என்னும் நான்கிடத்தும் துன்பம் நீத்த உவகை தோன்றும்.

**விளக்கவுரை:**

1. **செல்வம்:** செல்வச் செழிப்பின் நிலையால் உவகை நிகழும்.

2. **புலன்:** இங்கு ஐம்புலன்கண் மனம் நாடி அதனால் அடையும் உவகை கூறப்படுதலாம்.

மெய்-நல்லாடை, மற்றும் நல்லுறக்கத்திற்கு ஏற்ற படுக்கை. காற்றின் தன்மையால் மெய்வழி உவகையுறும்.

வாய்: சுவையுணவின் வாயிலாக உவகையுறும்.

கண்: இனிய காட்சியின் வாயிலாக உவகையுறும்

நாசி: இனிய மணம் நுகர்தலின் வாயிலாக உவகையுறும்.

செவி: இனிய கீதங்களைக் கேட்பதனால் உவகையுறும்.

3. **புணர்வு:** தலைவன் தலைவி மகிழ்ந்து கூடுதலால் உவகையுறும்.

4. **விளையாட்டு:** ஆறு, சோலை முதலிய இடங்களை யடைதலும், உலா வருதலும் ஆடல்வகை மேற்கொள்ளு தலும் ஆகிய நிகழ்வால் உவகையுறும்.

**சிறப்புரை:** இத்தன்மையில் மெய்ப்பாடுகள் எட்டு எனினும் நூற்பா 248 முதல் நூற்பா 255 வகையிலான நூற் பாக்கள் எட்டின் வாயிலாக 32 வகையான மெய்ப்பாடுகள் சாற்றப்பட்டன. அல்லல் நீத்த உவகை எனப்பட்டதால் பிறர் துன்பம் கண்டு பழிதீர வருவது உவகையின்பால் ஆகாது என்பதாம்.

இம்மெய்ப்பாடுகள் தான் பிறரைச் செய்யும் கால மாயினும் பிறர் தனக்குச் செய்யும் காலத்தும் பிறக்கும் என்பதாம்.

**அரும்பதவுரை:** புலன்-ஐம்புலன் உணர்வு. புணர்வு-தலைவன் தலைவி கூடுதல். விளையாட்டு-கானகம், சோலை, ஆறு, குளம் முதலிய இடங்களில் ஆடுதல், மற்றும் பந்தாடுதல், காளை தழுவுதல், யானை, குதிரை சவாரி போன்றனவும் கொள்ளப்படும்.

11

**நூற்பா-256:**

ஆங்குஅவை ஒருபால் ஆக, ஒருபா லாக
உடைமை, இன்புறல், நடுவுநிலை, அருளல்
தன்மை, அடக்கம், வரைதல், அன்பெனாஅக்
கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல்,
நாணல், துஞ்சல் அரற்றுக் கனவெனாஅ
முனிதல், நினைதல், வெரூஉதல், மடிமை,
கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு எனாஅக்
கையாறு, இடுக்கண், பொச்சாப்புப் பொறாமை,



வியர்த்தல், ஐயம், மிகை,நடுக்கு எனாஅ
அவையும் உளவே அவையலங் கடையே.

**தெளிவுரை:** முன்னர்க் கூறப்பட்ட மெய்ப்பாடு முப்பத் திரண்டும் ஒரு சார்பு ஆக மேலும் ஒரு சார்பான முப்பத் திரண்டு வகையான மெய்ப்பாடு உள்ளமை சாற்றுதலாம். அவையாவன. 1. உடைமை 2. இன்புறல், 3. நடுவுநிலை, 4. அருளல், 5. தன்மை, 6. அடக்கம், 7. வரைவு, 8. அன்பு, 9. கைம்மிகல், 10. நலிதல். 11. சூழ்ச்சி, 12. வாழ்த்தல், 13. நாணல் 14. துஞ்சல், 15. அரற்றுதல், 16. கனவு, 17. முனிதல், 18. நினைதல், 19. வெருவுதல், 20. மடிமை, 21. கருதல். 22. ஆராய்ச்சி, 23. விரைவு, 24. உயிர்ப்பு, 25. கையாறு, 26. இடுக்கண், 27. பொச்சாப்பு, 28. பொறாமை, 29. வியர்த்தல், 30. ஐயப்பாடு, 31. மிகை, 32. நடுக்கம்.

**விளக்கவுரை:** 1. உடைமை: யாதேனும் ஒரு பொருளை உடைமையால் வரும் பெருமையும் மனமகிழ்வும் ஆம். இத்தன்மையில் திருவள்ளுவர்.

*"உடையர் எனப்படுவது ஊக்கம்அஃ துஇல்லார்*
*உடையது உடையரோ மற்று."* -திருக்குறள், 591

என்று சாற்றியமை காண்க.

2. **இன்புறல்:** இனிமை வகையில் மெய்யும் மனமும் இன்புறுதல்.

3. **நடுவுநிலைமை:** சமநிலையில் மனத்தை நிறுத்தும் வகையில் வேண்டியமை வேண்டாமை என்னும் விகல் பத்தை நீக்குதல்.

4. **அருள்:** எல்லா உயிர்களிடமும் அருள் நிலையுடன் அன்பு கொண்டு விளங்குதல் "அருள் என்னும் அன்பு ஈன் குழவி" என்னும் திருக்குறள் 757 காண்க.

5. **தன்மை:** இது குல இயல்பாம் அந்தணர், அரசர் முதலாக ஒருவர்பால் காட்டும் வேறுபட்ட தன்மை.

**6. அடக்கம்: மனம் மொழி மெய்யின் வகையில் அடங்குதல். இதனைத் திருவள்ளுவர்**

*''ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து.''* -திருக்குறள், 126

எனவும்.

*''யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு''* -திருக்குறள், 127

எனவும் சாற்றியவாறு கொள்க.

7. **வரைவு:** இது செய்யத் தக்கனவும் செய்யத் தகாதனவு மாகிய முறைமையைக் குறித்தது. இதனைத் திருவள்ளுவர்.

*''செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
*செய்யாமை யானும் கெடும்.''* -திருக்குறள், 466

என்று சாற்றியவாறு காண்க.

8. **அன்பு:** தன்னுன் பயின்றவர்பால் செலுத்தும் நேயம். இத்தன்மையில்,

*''அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை''* -நெய்தற்கலி, 16

எனவும், திருவள்ளுவர்

*''அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு*
*என்போடு இயைந்த தொடர்பு''* -திருக்குறள், 73

என்று சாற்றியவாறும் காண்க.

9. **கைம்மிகல்:** இது குற்றமாயினும் குணமாயினும் அளவில் மிகுதலாம். இதனை ஒழுக்கத்கேடு எனவும் சாற்றுவர். இத்தன்மையில் திருவள்ளுவர்,



*''நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்*
*மேற்சென்று இடித்தற் பொருட்டு.''* -திருக்குறள், 784

என்று சாற்றியமை காண்க.

10. **நலிதல்:** இது பிறரை நெருக்கி வருத்தல் ஆகும்.

11. **சூழ்ச்சி:** இது எண்ணத்தைக் குறித்தமையாம். இதனை மனத் தடுமாற்றம் என உரையாசிரியர் உரைப்பர். இத் தன்மையில் திருவள்ளுவர்,

*''சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்*
*சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்''* -திருக்குறள், 445

என்று சாற்றியவாறும் காண்க.

12. **வாழ்த்தல்:** இது பிறனை வாழ்த்துதலாம். அரசன் முதலாயினோரை வாழ்த்துதல். இதனை,

*''செல்வரைப் படப்பை நாஞ்சில் பொருந!*
*சிறுவெள் அருவிப் பெருங்கல் நாடனை*
*நீ! வாழியர்! நின் தந்தை*
*தாய் வாழியர்! நிற்பயந்திசி னோரே!''* -புறநானூறு பாடல் 137; வரிகள் 12-15

என வருமாறும் காண்க.

13. **நாணல்:** இது பழி வருவன செய்யாமை இதனைத் திருவள்ளுவர்,

*''ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறல்ல*
*நாண்உடைமை மாந்தர் சிறப்பு.''* -திருக்குறள், 1012

என்று சாற்றியமை காண்க.

14. **துஞ்சல்:**

இஃது உறக்கத்தைக் குறித்தது இதனை,

''நள்ளென்று அன்றேயாமம் சொல்ல விந்து
இனிது அடங்கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓ ஓயான் மன்ற துஞ்சா தேனே'' -குறுந்தொகை-6

எனச் சாற்றியவாறும் காண்க.

15. **அரற்றுதல்:** இஃது உறக்கத்தின்கண் வரும் வாய்ச் சொல் ஆகும். (வாய் வெரூஉ).

16. **கனவு:** இது நனவு போன்று ஆதலின் மெய்ப்பாட்டின் பாற் சாற்றுதலாம். இதனைத் திருவள்ளுவர்,

''நனவினாற் கண்டதூஉம் ஆங்கே கனவும்தான்
கண்ட பொழுதே இனிது'' -திருக்குறள், 1215

எனச் சாற்றியவாறும் காண்க.

17. **முனிதல்:** இது வெறுத்தலைக் குறித்தலாம். இத்தன்மை யில் திருவள்ளுவர்,

''எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து'' -திருக்குறள், 1080

என்று சாற்றியவழி வெறுப்பின் தன்மை புலனாதலைக் காண்க.

18. **நினைத்தல்:** இது சென்று கழிந்த நிலையினை மீளவும் நினைத்தலாம். அது மறந்தும் மறவாது பின்பும் தோன்றுத லால் மெய்ப்பாடு ஆயிற்று. இதனைத் திருவள்ளுவர்,

''நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.'' -திருக்குறள், 1203

என்று சாற்றியமை காண்க.

19. **வெருவுதல்:** இது அச்சத்தைப் போன்று நீண்ட போது நில்லாது உடனே தோன்றி மறையும் குறிப்பு. துணுக்குறுதல் எனவும் ஆம். இதனைத் திருவள்ளுவர்,



''வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.'' -திருவள்ளுவர், 563

என்று சாற்றியவாறும் காண்க.

20. **மடிமை:** இது சோம்பல் தன்மையைக் குறித்தலாம். இத்தன்மையில் திருவள்ளுவர்,

''மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.'' -திருக்குறள், 608

என்று சாற்றியவாறும் காண்க.

21. **கருதல்:** இது ஒன்றைக் கருதி நினைத்தல் என்னும் மெய்ப்பாடு ஆகும். இதனைத் திருவள்ளுவர்,

''குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.'' -திருக்குறள், 1095

என்று சாற்றியவாறும் காண்க. இது குறிக்கோள் என்னும் மெய்ப்பாட்டின் வழியாம் என்று இளம்பூரணர் உரைநலம் காண்பர்.

22. **ஆராய்ச்சி:** ஒரு பொருளை நன்று, தீது என்று பாகு படுத்தி ஆராய்தல், தெளிதல், தேர்தல், தெரிதல், நாடுதல் எனவாம். இத்தன்மையில் திருவள்ளுவர்,

''தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.'' -திருக்குறள், 462

என்று சாற்றியவாறும் காண்க.

23. **விரைவு:** இஃது ஒன்றினைத் துரித நிலையில் ஆற்றும் தன்மையைக் குறித்தது. செய்யும் செயலைத் தாமதமின்றி ஆற்றுதல் தன்மை சாற்றியது. இத்தன்மையில் திருவள்ளு வர்,

''தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.'' -திருக்குறள், 672

என்று சாற்றியமையும் காண்க.

24. **உயிர்ப்பு:** வேண்டியவாறு பெறாத வழி எண்ணி விடுகின்ற பெருமூச்சு. இது துன்பத்தின் தன்மையினைப் புலப்படுத்தும் மெய்ப்பாடு வகை என்பதாம். இதனை,

*"புனக்கிளி கடியும் பூங்கண் பேதை*
*தான் அறிந்தனளோ இலளோ பானாள்*
*பள்ளி யானையின் உயிர்த்தென்*
*உள்ளம் பின்னும் தன்னுழை யதுவே"* -குறுந்தொகை. 142

என்று சாற்றியவாறும் காண்க.

25. **கையாறு:** இது காதலர் பிரிவதால் வரும் துன்பம் பற்றிய மெய்ப்பாடாயிற்று. இதனை,

*"தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்*
*கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ."*
-கலித்தொகை, பாலைக்கலி - 24; வரி எண்கள் 8, 9

என வருமாறும் காண்க.

26. **இடுக்கண்:** இது துன்பம் மிகுதியைக் குறித்தது. இத்தன்மையில் திருவள்ளுவர்,

*"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற*
*இடுக்கண் இடுக்கண் படும்.* -திருக்குறள், 625

என்று சாற்றியவாறும் காண்க.

27. **பொச்சாப்பு:** இது மறத்தல் நிலையை உணர்த்தியது. இத்தன்மையில் திருவள்ளுவர்,

*"பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து*
*எப்பால்நூ லோர்க்கும் துணிவு."* -திருக்குறள், 533

என்று சாற்றியவாறும் காண்க.



28. **பொறாமை:** பிறர்க்கு வளம் உண்டாதல் கண்ட இடத்துப் பொறுக்காது அழுக்காறு கொள்ளும் மன உணர்வு. இதனைத் திருவள்ளுவர்,

*"அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்*
*தீயுழி உய்த்து விடும்."* -திருக்குறள், 168

என்று சாற்றியவாறும் காண்க.

29. **வியர்த்தல்:** இது தன்மனத்தில் வெகுட்சி போன்றதோர் உணர்வு தோன்றியபோது பிறக்கும் புழுக்கம். இத்தன்மை யில் திருவள்ளுவர்.

*"பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து*
*உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்."* -திருக்குறள், 487

என்று சாற்றியவாறு காண்க. இங்கு உள்வேர்ப்பர் என்பதனால் மன நிகழ்ச்சி ஆகியவாறு உணர்த்திற்று.

30. **ஐயப்பாடு:** இஃது ஒரு பொருளைக் கண்ட வழி அதனை இது எனத் துணியாத நிலைமை குறித்தது. இத்தன்மையில் திருவள்ளுவர்,

*"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலுமென் நெஞ்சு."* -திருக்குறள், 1081

என்று சாற்றியவாறு காண்க.

31. **மிகை:** இஃது ஒருவனை நன்கு மதியாது இருத்தலைக் குறித்தது. இத்தன்மையில் திருவள்ளுவர்,

*"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்*
*தகுதியான் வென்று விடல்."* -திருக்குறள், 158

என்று சாற்றியவாறும் காண்க.

32. **நடுக்கம்:** இஃது ஒருபொருளை இழப்பதனால் வரும் மன நிகழ்ச்சி இத்தன்மையில்,

*"கொடுங்குழாய்! துறக்குநர் அல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே."*
*-கலித்தொகை, பாலைக்கலி 12; வரிகள் 26,27*

என வருவன காண்க. 12

### 2. அகத்திணைக்குரிய மெய்ப்பாடுகள்

**நூற்பா-257:**

புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல் சிதைவுபிறர்க்கு இன்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப.

**தெளிவுரை:** இது காட்சி குறிக்கது.

தலைவன் புணர்ச்சிக் குறிப்புடையவனாய் புகுமுகத் தினை மாறுபடாது பொருந்துதல், தலைவன் கூறும் போது தலைவி அச்சம், நாணம் காரணமாக நெற்றி வியர்த்தல், தலைவன் செயலால் நகை உண்டாயினும் தலைவி அதனை மறைத்தல், தலைவன்பால் தன்மனம் சிதைந்ததைப் பிறர் அறியாதவாறு மறைத்தல் ஆகிய நான்கும் முதற்கண் அமையும் மெய்ப்பாட்டின் தன்மையாகும்.

**அரும்பதவுரை:** புகுமுகம் புரிதல்-தலைவி தன்னைக் காணவேண்டும் என்று தலைவன் விரும்புதல். நுதல்-நெற்றி நகுநயம்-முறுவல் இனிமை. சிதைவு-தலைவியின் மனம் தலைவன்பால் ஈடுபட்டு அழிதல். பிறர்க்கு இன்மை-பிறர் அறியாதவாறு தலைவி மறைத்தல். தகுமுறை-தக்கவாறு தோன்றும் மெய்ப்பாடு. 13

**நூற்பா-258:**

கூழை விரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த்து உடுத்தலொடு
கெழீஇய நான்கே இரண்டென மொழிப.



**தெளிவுரை:** இது வேட்கை குறித்தது.

தலைவன் தலைவி யைக் கூடும் வகையில் முற்படும் போது தலைவி வெறுமனே நில்லாது தலைமயிரை அவிழ்த்துப் பின்னுதல், காதணியைக் கழற்றி விழச்செய்து பின்னர்த் தேடுவாள் போலும் புரிதல், தான் அணிந்துள்ள வளையல் முதலான அணிகலன்களைத் தடவுதல் போன்று மேலும் கீழும் அசைவித்தல், தான் அணிந்துள்ள உடையைத் தளரச்செய்து அவிழ்ந்தது போல் ஆக்கி மீண்டும் உடுத்தல் ஆகியனவற்றைத் தலைவி சிறப்பினதாகப் புரிதலின்வழி மெய்ப்பாடு நிகழும் என்பதாம்.

இதன்வழி ஆறுவகையான மெய்ப்பாடுகளுள் இஃது இரண்டாம் வகை என்பதாம்.

**அரும்பதவுரை:** கூழை விரித்தல்-தலைமயிரை அவிழ்த்தல். காதொன்று களைதல்-காதணிகளைக் கழற்றுதல். ஊழணி தைவரல்-வளையல் முதலியன தடவுதல். கெழீஇய நான்கு-சிறப்பின் வழி அமையும் மெய்ப்பாடுகள் நான்கு. 14

**நூற்பா-259:**

அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப.

**தெளிவுரை:** இது ஒருதலை உள்ளுதல் குறித்தது.

தலைவி மேலுடையை நன்கு ஒழுங்கு படுத்துதலும், தான் அணிந்துள்ள அணிகளைத் திருத்துதலால் உரியவாறு அமைத்தலும், தம் இல்லின் மரபினைச் சொல்லி இசைவி லாள் போல் மறுத்துக் கூறுதலும், தம் இருகைகளையும் மேலே எடுத்து நாணம் நீக்குதலும் ஆகிய நான்கு வகை யான மெய்ப்பாடுகள் மூன்றாவதாக நிகழும் என்பதாம்.

**அரும்பதவுரை:** அல்குல் தைவரல்-அல்குல் என்பது இடைப் பகுதியில் உள்ளதாயினும் மேகலை என்னும் பொருள் கொண்டு மேலாடையைச் சாற்றுதலாயிற்று. அணிந்தவை- அணிகலன்கள். இல்வலியுறுத்தல்- தன்னைக் கூடுதற்கு முற்படும் தலைவன்பால் தன் குடிப்பண்பாட்டுச் சிறப்பினைக் கூறி இசையாதவள் போன்று தலைப்படுதல். இருகை எடுத்தல்-தன் கைகளை உயர்த்தித் தலைவன் கருத்துக்கு இசையும் வகையில் நாணம் நீங்குதல். 15

**நூற்பா-260:**

பாராட்டு எடுத்தல் மடந்தப உரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்குஎன மொழிப.

**தெளிவுரை:** இது மெலிதல் குறிக்குது.

தலைவி தலைவனைப் பாராட்டிப் புகழ்தல். தன் வேட்கையை வெளிப்படுமாறு மடப்பம் நீங்கி உரைத்தல். (ஊரார் பேசும் பழிப்புரையை எண்ணி நாணம் அடைதல்) தலைவன்தரும் கண்ணி (தலையில் சூடும் மலர்மாலை) முதலியனவற்றைக் கொள்ளுதல். ஆகிய நான்குவகையான மெய்ப்பாடுகள் நான்காவது வகையாக நிகழ்தலாம்.

**அரும்பதவுரை:** மடந் தப உரைத்தல்-மடப்பம் கெட உரைத்தல். ஈரமில் கூற்றம்-அன்பு நீங்கிய சொற்கள். அலர்-ஊரார் கூறும்பழி. கொடுப்பவை-தலைவன் கொடுக்கும் கண்ணி. தளிர் முதலானவை. கோடல்-தலைவி மகிழ்ந்து கொள்ளுதல். உளப்பட-இவை உள்ளத்தின்கண் மேவும் உவகையின் வழியடைதல். நான்கு என-நான்காம் அவத்தை மெலிதல் என்பது. 16



**நூற்பா-261:**

தெரிந்துஉடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்
கரந்துஇடத்து ஒழிதல் கண்டவழி உவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப.

**தெளிவுரை:** இஃது ஐந்தாம் அவத்தையாகிய ஆக்கம் செப்பல் என்பதைப் பற்றிக் கூறுதலாம்.

தலைவன் கொடுப்பனவற்றைத் தலைவி ஏற்க மறுத்து வந்த நிலைமாறி ஆராய்ந்து நோக்கித் தெளிந்தவளாய்ப் புணர்ச்சிக்கு உடம்படுதல். சோலை முதலான இடங்களில் மேவும் விளையாட்டை மறுத்தல், தலைவனைக் காணும் வேட்கையால் மறைந்து நின்று மொழிதல். தலைவனைக் கண்ட இடத்து மகிழ்தல் ஆகியநான்கும் ஐந்தாம் அவத்தையின் மெய்ப்பாடாக நிகழும்.

**அரும்பதவுரை:** தெரிந்து உடம்படுதல்-ஆராய்ந்து நோக்கித் தலைவன் விருப்பத்திற்கு உடம்படுதல். திளைப்பு வினை-விளையாட்டு. கரந்து இடத்து-மறைவு இடம். ஒழிதல்-மறைந்திருத்தல். கண்ட வழி-தலைவனைக் கண்டநிலை. ஐந்து-ஐந்தாம் அவத்தை. இது ஆக்கம் செப்பல் என்பதாம். 17

**நூற்பா-262:**

புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையறவு உரைத்தல்
விளம்பிய நான்கே ஆறுஎன மொழிப.

**தெளிவுரை:** இஃது ஆறாவது அவத்தையான நாணுவரை இறத்தல் என்னுமாறு நிகழும் மெய்ப்பாட்டினை உரைத்த லாயிற்று.

தலைவிக்குத் தலைவன் முன் நின்று அழகிய ஒப்பனை செய்ய விரும்பும் காலத்துத் தலைவி அதனை ஏற்காது சிதைத்தல், பொலிவு இழந்து தோன்றுதல், மனக் கலக்கம் உற்று மொழிதல், செயலற்ற தன்மை தோன்றுமாறு கூறுதல் ஆகிய நான்கும் நிகழத்தக்க மெய்ப்பாடுகளாம்.

**அரும்பதவுரை:** புறஞ் செயச் சிதைத்தல்-தலைவன் தலைவியின்பால் செய்யும் ஒப்பனையைத் தலைவி ஏற்காது சிதைத்தல். கையறவு-செயலற்ற தன்மை. ஆறு-ஆறாவது அவத்தை. *18*

**நூற்பா-263:**

அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்தம் என்ப.

**தெளிவுரை:** மேற் குறித்தவாறு சொல்லப்பட்டவையோடு பிறவும் நிலை பெற்ற மெய்ப்பாட்டின் தன்மை உளவாம்.

**விளக்கவுரை:** மேற் கூறப்பட்ட மெய்ப்பாட்டு வகைகள் இருபத்திநான்கு ஆகும். அவை பத்து அவத்தைகளில் நிகழ்வனவாம். அவை சாற்றியவாறு காண்க.

1. நூற்பா -257 1. காட்சி
2. நூற்பா-258 2. வேட்கை
3. நூற்பா-259 3. ஒருதலை உள்ளுதல்
4. நூற்பா-260 4. மெலிதல்
5. நூற்பா-261 5. ஆக்கம் செப்பல்
6. நூற்பா-262 6. நாணுவரை இறத்தல்

இவையேயல்லாது 7 நோக்குவ எல்லாம் அவையே போலுதல். 8. மறத்தல், 9. மயக்கம், 10. சாக்காடு ஆகியனவும் கொள்ளப்படும் ஆயினும் முன்னவை ஆறும்



ஐந்திணை ஒழுக்கத்தின்பால் அமைதலாம். அடுத்த நான்கும் கைக்கினை மற்றும் பெருந்திணையின் பால் அமைதலாம்.

**அரும்பதவுரை:** அன்ன பிறவும்-முன்னர்த் தெரிவித்த மெய்ப்பாடுகள் 24 அல்லாது பிற. சிவணி-பொருந்திய. மன்னிய வினைய-பெருமை தரும் செயல்பாடுகள். நிமித்தம்-தோன்றும் தன்மை. *19*

**நூற்பா-264:**

வினையுயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே.

**தெளிவுரை:** மேற்கூறப்பட்ட மெய்ப்பாடுகள் இருபத்தி நான்கும் முறைப்படியோ அன்றி அனைத்துமோ நிகழ்தல் இன்றி ஒருசில விடுபடுதலும் உளதாம்.

**அரும்பதவுரை:** மெலிவிடம்-தளர்ச்சியுற்ற இடம். இன்மை யும் உரித்து-மெய்ப்பாடு நிகழாமை குறித்தது. 20

**நூற்பா-265:**

அவையும் உளவே அவையலங் கடையே.

**தெளிவுரை:** இங்குக் கைக்கிளைக்கு உரியதோர் மெய்ப்பாடு கூறப்படுதலாம்.

முன் கூறப்பட்ட (நூற்பா-257) புகுமுகம் புரிதல் முதலானவை ஐந்திணையின்பால் அமைய அவையல்லாத கைக்கிளைப் பொருண்மையிலும் மெய்ப்பாடு நிகழும் என்பதாம்.

**அரும்பதவுரை:** அவை-புகுமுகம் புரிதல் முதலியன. அவையலங்கடை-களவு கற்பு அல்லாத கைக்கிளை. *21*

**நூற்பா-266:**

இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல்,
எதிர்பெய்து பரிதல், ஏதம் ஆய்தல்,

பசியட நிற்றல், பசலை பாய்தல்,
உண்டியிற் குறைதல், உடம்புநனி சுருங்கல்,
கண்துயில் மறுத்தல், கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடல், மெய்யே என்றல்,
ஐயஞ் செய்தல், அவன் தமர் உவத்தல்,
அறன்அழிந்து உரைத்தல், ஆங்குநெஞ்சு அழிதல்,
எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்,
ஒப்புவழி யுறுத்தல், உறுபெயர் கேட்டல்,
நலத்தக நாடிற் கலக்கமும் அதுவே.

**தெளிவுரை:** இங்குக் கூறப்பட்ட இருபதும் ஐந்திணை அல்லாதவழி நிகழும் மெய்ப்பாடு என்பதாம். இவை பெருந்திணையின் பாற்படும்.

1. **இன்பத்தை வெறுத்தல்:** இது தலைவன் செய்யும் கோலம் ஒப்பனை முதலானவற்றைத் தலைவி ஏற்காதவளாய் வெறுத்தல். மற்றும் தென்றல், நிலவு முதலியவற்றை வெறுத்தலாம். இதனைத் திருவள்ளுவர்,

*''கண்ணுள்ளார் காத லவர்ஆகக் கண்ணும்*
*எழுதேம் கரப்பாக்கு அறிந்து.''* *-திருக்குறள், 1127*

எனச் சாற்றியவாறு காண்க.

2. **துன்பத்துப் புலம்புதல்:** பிரிவாற்றது துன்புறும் தலைவி அத்துன்பம் தனக்கே ஆகியது என எண்ணிப் புலம்புதல்.

3. **எதிர்பெய்து பரிதல்:** தலைவனையும் அவனுடைய தேர் முதலியவற்றையும் தானே கற்பித்துக் கொண்டு தலைவி இரங்குதல்.

4. **ஏதம் ஆய்தல்:** தன்பால் தலைவன் கூடுவதற்குத் தடையாக உள்ளவற்றை ஆராய்தல்.



5. **பசியட நிற்றல்:** பசி வருத்திய நிலையிலும் அதனைப் பற்றி எண்ணாது உணவு கொள்ளாதிருத்தல்.

6. **பசலை பாய்தல்:** காதல் நோயால் மேனியில் பசலை கொண்டு இருத்தல்.

7. **உண்டியிற் குறைதல்:** உணவு கொள்ளாதிருப்பின் உற்றார் ஐயுறுவர் என்று கருதிச் சிறிது உணவு கொள்ளுதல்.

8. **உடம்பு நனி சுருங்குதல்:** காதல் வருத்தம் மிகைப்படுதலால் உணவு கொள்ளாத நிலையில் நாளுக்கு நாள் உடல் மெலிந்து இளைத்தல்.

9. **கண்துயில் மறுத்தல்:** நெஞ்சில் காதல் ஏக்கம் நிறைதலால் இரவும் பகலும் உறக்கம் கொள்ளாது இருத்தல்.

10. **கனவொடு மயங்குதல்:** அரிதில் துயில் கொண்ட நிலையில் கனவின்கண் தலைவனைக் கண்டு பின்னர் விழிப்புற்று அதனையே எண்ணி மயங்குதல்.

11. **பொய்யாக் கோடல்:** தலைவன் கூறிய சொற்கள் பொய்யாயினவோ என எண்ணுதல்.

12. **மெய்யே என்றல்:** தலைவன் கூறிய பொய்யுரைகளை மெய்யெனக் கொண்டு இருத்தல்.

13. **ஐயம் செய்தல்:** தலைவன் இப்பிறப்பில் தன்னைக் கைவிடுவனோ என்று ஐயுறுதல்.

14. **அவன்தமர் உவத்தல்:** தலைவனது சுற்றத்தினரைக் கண்டு தலைவி அகம் மகிழ்தல்.

15. **அறன் அழித்து உரைத்தல்:** அறன் அழிய வெறுப்பது போல் தலைவி வெறுத்துக் கூறுதல்.

16. **ஆங்கு நெஞ்சு அழிதல்:** அறன் அழிய உரைக்கும் இடத்து அதனால் நெஞ்சு கலங்கிக் கூறுதல்.

**17. எம்மெய்யாயினும் ஒப்புமை கோடல்:** ஏதேனும் ஒன்று உடம்படுதல் ஆயினும் அதனைத் தலைவனோடு ஒப்புமைப் படுத்திக் காணுதல்.

**18. ஒப்புவழி உவத்தல்:** எத்தன்மையாயினும் ஒப்புமை கண்ட இடத்து அதனைக் கண்டு மகிழ்தல்.

**19. உறுபெயர் கேட்டல்.** தலைவன் சிறப்பினைப் பிறர் வாயிலாகக் கூறக் கேட்ட அளவில் விரும்பி ஏத்தலும் மகிழ்தலும் ஆதல்.

**20. கலக்கம்:** மனக் கலக்கத்தில் பெரும்பான்மையாக இருந்து ஏங்குதல்

இத்தன்மையில் இருபது வகையான மெய்ப்பாடுகள் நிகழ்தலை உரைத்தலாயிற்று.

**அரும்பதவுரை:** பரிதல்-வருந்துதல். ஏதம்-பிரிவுக்குக் காரணமாகிய குற்றப்பாங்கு. பசியட-உண்ணாமை. உண்டி-உணவு. சுருங்கல்-இளைத்தல். அவன்தமர் -தலைவனது உறவினர். மெய்-தலைவன் கூற்று. உறுபெயர்-தலைவன் பெயரும் சிறப்பும். 22

**நூற்பா-267:**

முட்டுவயிற் கழறல், முனிவுமெய்ந் நிறுத்தல்,
அச்சத்தின் அகறல், அவன்புணர்வு மறுத்தல்,
தூதுமுனி வின்மை, துஞ்சிச் சோர்தல்,
காதல் கைம்மிகல், கட்டுரை இன்மைஎன்று
ஆயிரு நான்கே அழிவில் கூட்டம்.

**தெளிவுரை:** இது ஐந்திணைக்கு உரியதாம். இது வரைவு கொள்ளும் கூட்டம் என்பதாம். இவை எட்டு வகைப்படும்.

**1. முட்டுவயிற் கழறல்:** களவு இடையீடு படினும் வருந்தாது தலைவனை நண்ணி உரைத்தல்.



**2. முனிவு மெய்ந்நிறுத்தல்:** வெறுப்பினைப் பிறர் அறியாத வாறு மெய்யின்கண் நிறுத்தல்.

**3. அச்சத்தின் அகலல்:** களவொழுக்கத்தை அச்சத்தின் பாற்பட்டு விலக்கல்.

**4. அவன் புணர்வு மறுத்தல்:** தலைவன் புணர்தலுக்கு உடம்படாமை.

**5. தூது முனிவின்மை:** தலைவன் விடுக்கும் தூதுபற்றி வெறுக்காதிருத்தல்.

**6. துஞ்சிச் சோர்தல்:** துயர் நீங்கி உரிமை காரணமாக உறக்கம் கொள்ளாதிருத்தல்.

**7. காதல் கைம்மிகல்:** காதலின் எல்லை கடத்தல்

**8. கட்டுரை இன்மை:** உள்ளக் கருத்தை வெளிப்படுத் தாமை. இத்தன்மையில் நிகழும் மெய்ப்பாடு உரைக்கப் பட்டது. இத்தன்மையில் நூற்பா 109 (களவியல் 21) இல் சாற்றிய வகையும் இயைபு கொள்க.

**அரும்பதவுரை:** முட்டுவயின்-இடையீடு படும் தன்மை. கழறல்-உரைத்தல். முனிவு-வெறுப்பு. மெய்ந்நிறுத்தல்-பிறர் அறியாதவாறு காத்தல். அகறல்-அகலுதல். அவன்-தலைவன். கைம்மிகல்-பெருகுதல். அவன்-தலைவன். கட்டுரை-பேச்சு. அழிவில் கூட்டம்-அழிதல் இல்லாத கூட்டம். வரைவுக்கு உரியவாகும் கூட்டம். 23

**நூற்பா-268:**

தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்,
இல்லது காய்தல், உள்ளது உவர்த்தல்,
புணர்ந்துழி உண்மை, பொழுதுமறுப்பு ஆதல்,
அருள்மிக உடைமை, அன்புமிக நிற்றல்,
பிரிவு ஆற்றாமை, மறைந்துஅவை உரைத்தல்,

புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்தும் செப்பிய பொருளே.

**தெளிவுரை:** அழிவில் கூட்டம் எனச் சாற்றப்படும் வரைவு குறித்து நிகழும் பத்து மெய்ப்பாடுகள் இங்குக் கூறப்படுத லாம்.

1. **தெய்வம்அஞ்சல்:** தெய்வத்தால் ஏதேனும் தீங்கு விளையுமோ என அஞ்சுதல்.

2. **புரையறம் தெளிதல்:** தனக்குரிய இல்லறம் இது எனத் தலைவி நன்கு தெளிதல்.

3. **இல்லது காய்தல்:** தலைவன்பால் இல்லாத குற்றத்தை இருப்பதாகக் கருதிச் சினம் கொள்ளுதல்.

4. **உள்ளது உவர்த்தல்:** தலைவன் செய்யும் அன்பின் செயலை நன்கு தெளியாது அருவருத்துக் கடிதல்.

5. **புணர்ந்துழி உண்மை:** ஊடல் இருப்பினும் தலைவன் பால் கூடக்கருதும் உள்ளத்தின் தன்மை.

6. **பொழுது மறுப்பாதல்:** தலைவன் வந்துற்றபோது அப்போது நிகழும் காலப் பொழுதைக் கருதி மறுத்தலாகிய மனநிகழ்வு.

7. **அருள்மிக உடைமை:** தலைவனிடம் அருள்மேவும் நெஞ்சினளாய்த் தலைவி விளங்குதல்.

8. **அன்பு மிக நிற்றல்:** தலைவன்பால் அன்புமிகக் கொண்டு விளங்குதல்.

9. **பிரிவாற்றாமை:** தலைவனைப் பிரிந்திருத்தல் ஆற்றாமை.

10. **மறைந்தவை உரைத்தல்:** களவுக் காலத்தில் ஒழுகிய தன்மையை இனிது புலப்படுத்தல். இதனால் தலைவனைப்



பற்றியெழுந்த புறவொழுக்கத்தையும் பெருமை காணாத நிலையில் உரைத்தல் கூடும் என்பது.

**அரும்பதவுரை:** புரையறம்-பரத்தமை கண்டு தலைவன் கொண்ட தன்மை. அதனால் வருந்தாது தலைவி தன் மனை யறத்தைத் தெளிதல். உவர்த்தல்-அருவருத்தல். பொழுது-காலப்பொழுது. மறுப்பு-கூடுதற்கு உடம்படாமை. மறைந் தவை-களவொழுக்கத் தன்மை. மாணாக்கிளவி-பெருமை யில்லாத சொல். 24

**நூற்பா-269:**

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உறவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருஎன
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.

**தெளிவுரை:** இங்குத் தலைவனுக்கும் தலைவிக்கும் உரிய ஒப்புமை கூறப்பட்டது. பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உருவு, அன்பின் வாயில், அடக்கம், அருள், உணர்வு, செல்வச் செழிப்பு ஆகிய பத்தும் ஒத்தநிலையில் அமைதலால் இப்பத்தும் அமைதலே வரைதலுக்கு உரித்தாகும். களவொழுக்கமும் தலைப்படும் என்பதாம்.

**விளக்கவுரை:** இதன் விளக்கத்தை நூற்பா-90-இல் (களவியல்-2) உரைத்தவாறும் இயைபு கொள்க.

**அரும்பதவுரை:** ஆண்டு-வயது. உருபு-அழகுநிலை. காம வாயில்-அன்பு. நிறை-அடக்கம். திரு-செல்வச் செழிப்பு. 25

### 3. தலைமக்கள் சார்பு

**நூற்பா-270:**

நிம்பிரி, கொடுமை, வியப்பொடு புறமொழி,
வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு குடிமை,
இன்புறல், ஏழைமை, மறப்போடு ஒப்புமை
என்றுஇவை இன்மை என்மனார் புலவர்.

**தெளிவுரை:** தலைமக்களுக்கு ஆகாத குணங்கள் இங்குக் கூறப்பட்டன.

1. நிம்பிரி-பொறாமைக் குணம்
2. கொடுமை-கேடு எண்ணும் தீய குணம்
3. வியப்பு-தன்னை வியந்து கொள்ளுதல்
4. புறமொழி-புறங்கூறும் வழி பிறரைக் குறைகூறுதல்
5. வன்சொல்-கடுஞ்சொல்
6. பொச்சாப்பு-தம்மைக் கடைப்பிடியாமை-சோர்வு நூற்பா 256 இல் குறித்தமையும் இயைபு கொள்க.
7. மடிமை-சோம்பல்
8. குடிமை இன்புறல்-தன் குடிப்பெருமையை எண்ணி மகிழ்தல்.
9. ஏழைமை-பேதைமை, எளிமை.
10 மறப்பு-மறத்தல் தன்மை
11. ஒப்புமை-ஒருவரைப் பிறருடன் ஒப்புநோக்குதல்.

இப்பண்புகள் இல்லாதவர்களிடையே மெய்ப்பாடுகள் தெளிய வெளிப்படுமாதலால் இவை சிறப்பாகக் கூறப் பட்டது. தற்காலத்தில் தசப்பொருத்தம் எனச்சாற்றுதலும் கருதுக.



**அரும்பதவுரை:** நிம்பிரி-அழுக்காறு. புறமொழி-புறங் கூறுதல். வன்சொல்-கடுஞ்சொல். பொச்சாப்பு-சோர்வு. மடிமை-சோம்பல், முயற்சி இன்மை. ஏழைமை-அறியாமை. 26

**நூற்பா-271:**

கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே.

**தெளிவுரை:** கண்ணாலும் செவியாலும் நுண்ணிய வகையால் உணர்பவர்கள் மட்டுமே இம்மெய்ப்பாடு களைத் தெளிவாக இனம் பிரித்துக் காணமுடியும். ஏனையோர் இவற்றை நன்கு உணர்தல் அரிது.

**அரும்பதவுரை:** எண்ணருங் குரைத்தே-ஆய்தற்கு அருமை. 27

**மெய்ப்பாடுகளின் வகைத் தொகுப்பு**

| | | |
|---|---|---|
| 1. சுவைவகை | 8 | நூற்பா -247 |
| 2. பெருவாயிலாகத் தோன்றுதல் | (8×4)32 | நூற்பா-248-255 |
| 3. வேறுபட்டுவருவன | 32 | நூற்பா-256 |
| 4. அவத்தைக்கண் வருவன(6×4) | 24 | நூற்பா-257-262 |
| 5. பெருந்திணை | 20 | நூற்பா-266 |
| 6. அழிவில் கூட்டம் (8+10) | 18 | நூற்பா-267,268 |
| 7. தலைவன் தலைவி ஒப்புமை | 10 | நூற்பா-269 |
| ஆக | 144 | |

**மெய்ப்பாட்டியல் மூலமும் உரையும் நிறைவுற்றது**